OS 258/2022

வா.சா.2 சம்பத் த/பெ பொன்னுசாமி

நாள் 13.03.2026

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. என்ன காரணத்திற்காக நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. எத்தனை அழைப்பாணை வந்தது என்றால் ஒரு அழைப்பாணை தான் வந்தது. அழைப்பாணையில் என்ன ஆவணங்கள் கொண்டு வர வேண்டும் என்று விவரங்கள் இருந்ததா என்றால் ஆதார் கார்டு, குடும்ப அட்டை எடுத்து வர வேண்டும் என்று இருந்தது. நான் பதிவு பெற்ற பத்திர எழுத்தரா என்றால் ஆமாம். எத்தனை வருடங்களாக பத்திர எழுத்தராக இருக்கிறேன் என்றால் சுமார் 25 வருடங்களாக இருக்கிறேன். அனைத்து வகையான ஆவணங்களையும் எழுத எனக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே அடமானக்கடன் தொகை கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம் தெரியாது. வாதி சொன்னதின் பேரில் தான் கிரைய ஒப்பந்தம் எழுதினேன் என்றால் சரிதான். வாதிக்கு இது போன்று எத்தனை ஆவணங்களை எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. வாதிக்காக ஒன்றுக்கு மேற்பட்ட ஆவணங்களை எழுதி கொடுத்து இருக்கிறேன்.

2. பத்திரப்பதிவு சட்டப்படி தான் கிரைய ஒப்பந்தம் தயார் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தம் கண்ணமங்கலம் சார் பதிவாளர் அலவலகத்தில் தான் எழுதப்பட்டது என்றால் சரிதான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 தான் அந்த ஆவணம் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் எவ்வளவு தொகைக்கு எழுதப்பட்டது என்றால் ரூ.2லட்சத்திற்கு எழுதப்பட்டது. கிரைய ஒப்பந்தம் எழுதியது சம்மந்தமாக வாதிக்கும் பிரதிவாதிக்குமான பணம் கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிரைய ஒப்பந்தம் எழுதுவதற்கு எவ்வளவு கட்டணம் வாங்கினேன் என்றால் அதை என்னால் சரியாக சொல்ல முடியாது. நான் கிரைய ஒப்பந்ததத்தை தயார் செய்து வாதியிடம் கொடுத்து பிரதிவாதியிடமும் சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கி வர சொன்னேன் என்றால் இல்லை சார் பதிவாளர் அலுவலத்தில் வாதி, பிரதிவாதி, சாட்சிகள் இருந்தார்கள். கிரைய ஒப்பந்தம் எழுதும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் கவிமனி, ஏழுமலை, சாட்சி லட்சுமி, சாட்சி ஏழுமலை ஆகியோர் இருந்தார்கள்.

3. மலர் என்பவர் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் எழுதும் போது பிரதிவாதியிடம் இருந்து மூலப்பத்திரத்தை வாங்கி வாதியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. மூல ஆவணம் இல்லாமல் கிரைய ஒப்பந்தம் எவ்வாறு எழுதினேன் என்றால் ஏழுமலையின் பூர்வீக சொத்து என்ற அடிப்படையில் எழுதினேன். வாதி கவிமணியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் பத்திரம் எழுத வந்த தேதியில் இருந்து தெரியும். அடமான கடனுக்காக பத்திரம் எழுதாமல் வாதி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக கிரைய ஒப்பந்தமாக ஆவணம் எழுதி அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.